**கவனிக்க.-** *10.02.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1746 - 2012 පෙබරවාරි මස 17 වැනි සිකුරාදා - 2012.02.17

*1746 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமுலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | 26 |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 26 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நொத்தாரிசுமார் பட்டியல்

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் - நியமனங்கள்

நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார்.

1. தெஹிவளை, கிரகரி வீதி, இல. 16, என்னுமிடத்தில் வதியும் திரு. புஸ்பா ராஜிதா ஸ்ரீவன்ச அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

2. கொழும்பு 15, சாந்த மரியா வீதி, இல. 6/1, என்னுமிடத்தில் வதியும் செல்வி செந்தநாயக்க ஆரச்சிகே தில்சாரா சாமரி பெரேரா அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

3. போகாஹாகும்புர, இந்துநில என்னுமிடத்தில் வதியும் திரு. அபேரத்ன ஜயசுந்தர பண்டித ஹேரத் பண்டாரநாயக்க முதியன்சேலாகே ரஞ்சித் சேனக பண்டார அவர்களை பதுளை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

4. நீர்க்கொழும்பு, தலதுவ வீதி, இல. 74/3, என்னுமிடத்தில் வதியும் செல்வி ருவினி வெல்கம அவர்களை நீர்கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

5. பெத்தேகம, சந்தரவல, ரத்னகிறி மாவத்தை, இல. 191ஏ, என்னுமிடத்தில் வதியும் செல்வி கம்முதுவத்தகே இரோனி விஜேவர்தன அவர்களை காலி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

6. வத்துகெதர, சீனிகொட, போதிய வீதி, இல. 6/ 46 என்னுமிடத்தில் வதியும் திரு. இமேஷ் லக்சித பிரசங்க பத்திரன அவர்களை பலபிட்டி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

7. சுன்னாகம், டாக்டர் சுப்ரமணியம் வீதி, ''மரிய வாசா'', என்னுமிடத்தில் வதியும் திருமதி கிரிஸ்ரீன் றோஸ் அஞ்சலோ ஞானேஸ்வரன் அவர்களை யாழ்ப்பாணம் நீதாசன வலயத்தினில் தமிழ் மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

பீ. வி. அபேகோன்,
செயலாளர்.
பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு 07,
2012.01.16.

2- 501/1

---

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் - நியமனங்கள்

நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார்.

1. யாழ்ப்பாணம், கொக்குவில், கொக்குவில் கிழக்கு, அம்மன் கோவில் வீதி, இல. 44/2, என்னுமிடத்தில் தலைமைக்காரியாலயத்தையும் யாழ்ப்பாணம், பிரதான வீதி. இல. 134 (276) என்னுமிடத்தில் துணைக்காரியாலயத்தையும் கொண்டு நடாத்தும் யாழ்ப்பாணம், கொக்குவில், கொக்குவில் கிழக்கு, அம்மன் கோவில் வீதி, இல. 44/ 2, என்னுமிடத்தில் வதியும் திரு. சிவலிங்கம் இளங்கீரன் அவர்களை யாழ்ப்பாணம் நீதாசன வலயத்தினில் தமிழ் மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்.
பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு 07,
2012.01.16.

2- 501/2

---

# நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை படம் வரையும் தொழில்நுட்பவியலர் நிறுவகத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

நெரஞ்சன் விக்ரமசிங்க பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் "இலங்கை படம் வரையும் தொழில்நுட்பவியலர் நிறுவகம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிறுவகம் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) படம் வரையும் தொழில்நுட்பவியல் பற்றிய அறிவியலையும் கற்கையையும் முன்னெடுத்துச் செல்லுதலும் மேம்படுத்தலும் பேணி வளர்த்தலும் ;

(2) படம் வரையும் செயல்முறைக்கு அவசியமானவாறான அல்லது இயைபானவையாகவுள்ள சட்டத்தின் அத்தகைய கிளைகளின் கற்கையை ஊக்குவித்தலும் பேணிவளர்த்தலும்;

(3) பல்வேறு உறுப்பாண்மைத் தரங்களுக்கும் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான தேர்வுநாடிகளின் தகைமையை மதிப்பீடு செய்தலும்.

பிறவும்.

நெரஞ்சன் விக்ரமசிங்க,
பாராளுமன்ற உறுப்பினர்,
குருநாகல் மாவட்டம்.

2-503

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.